# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, செத்தெம்பர் மாதம் 09 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 25.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. (கூட்.) 10/2016

**சிசிர ஜயக்கொடி சியபத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டமூலம்**

"சிசிர ஜயக்கொடி சியபத மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களினால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" என குறிப்பீடு செய்யப்படும்) சிசிர ஜயக்கொடி சியபத மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாகவுள்ள மற்றும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சிசிர ஜயக்கொடி சியபத மன்றம்" என்னும் சிசிர ஜயக்கொடி சியபத மன்றத்தைக் கூட்டிணைத்தல்

பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவானது வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சுயதொழிலை ஊக்குவிப்பதற்காக பலதரப்பட்ட கற்கைகள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல் மற்றும் சுயதொழிலை மேம்படுத்தும் நோக்குடன் தொழிலற்றோருக்கு அவசியமான பயிற்சிகள், உதவி மற்றும் அனுசரணைகளை வழங்குதல் ;

(ஆ) இயைபான அதிகாரிகளின் சம்மதத்துடன் சமயத் தலங்களைப் புனர்நிர்மாணம் செய்து பேணுவதற்கு அத்தகைய அதிகாரிகளுக்கு உதவுதல்;

(இ) தேவையுள்ள மக்களுக்கு பலதரப்பட்ட உதவிகளை வழங்குவதற்கு ''ஜன சஹன'' எனவழைக்கப்படும் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்;

(ஈ) தேவையான தகைமைகளையும் பயிற்சிகளையும் கொண்டுள்ள பட்டப்படிப்பு மாணவர்களுக்கு உதவுவதற்கென தொழிற்சந்தையின் தேவைப்பாடுகள் பற்றிய விரிவுரைகளையும் கருத்தரங்குகளையும் நடாத்துதல்;

(உ) சிரேட்ட பிரசைகளுக்கான உதவிகளை வழங்குதல் மற்றும் ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்தல்; அத்துடன்

(ஊ) உரிய அலுவலர்களின் உடன்பாட்டின்படி உள்நாட்டு மருத்துவ முறைமையை மேம்படுத்துவதற்கு செயற்படுதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அத்தகைய நடைமுறைப்படுத்துதலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையின் மீதான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப் படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், ஏற்புடையற் பாலனவான எழுத்திலான சட்டங்களின்கீழ் அவசியமான அங்கீகாரங்களுக்கு அமைவாகவும், அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடிய

வாறான அத்தகைய எண்ணிக்கையையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பந்தி (ஆ) வின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, பந்தி (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்ளும் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையிலும் முதலாவது சபை நியமிக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலச் சபையொன்றாகப் பணிபுரிதலும் வேண்டும்.

(ஆ) 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலச் சபை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணின்றி கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்துக்கான விதிகளை ஆக்குவதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்கால சபையின் ஏதேனும் முடிபு ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளிக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைஞர்களும் உட்பட, சபையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகல், தகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் சபையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு பின்வரும் தத்துவங் களுட்பட அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் :-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப் பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கு டன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அவற் றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய எல்லா ஒப்பந்தங்களை யும் அல்லது உடன்படிக்கைகளையும், நேரடியாக வாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால்

அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவரூடாகவாயினுஞ் சரி, செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் அல்லது கொண்டுநடாத்துதல்;

(இ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் திரட்டுதலும் மற்றும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின், சபையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட அல்லது அதற்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் அதனையொத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் நிலையான அல்லது

தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும் அவர்களுக்குச் செலுத்து தலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும் கருத்தரங்கு களையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் அலுவலர்களுக் கும் வேறு ஊழியர்களுக்கும் பயிற்சியளித்தலும்; அத்து டன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்து வதற்காக, இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எல்லாச் செயல்களையும் வேறு காரியங்களை யும் செய்தலும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்தி லும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை

கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களின் நியமனத்திற்கான நியதிநிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) சபையினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) சபையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களையொத்த அதே குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைவதற்கும் ஒருங்கிணைவதற்குமான நடவடிக்கைமுறையும் வழிமுறையும்; அத்துடன்

(ஏ) பொதுவாக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்ற அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதன்மேல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்கண்ணுள்ள தேதியில் பயனுக்கு வருதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஏதேனும் தேதியன்றுள்ள அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**8**. சபையானது, உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக் கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியம்

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்படப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் 6(இ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப் பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும், அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய் வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற

வொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை கணக்காய்வாளர் தலைமையபதிபதியினால் அல்லது அத்தகைய தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறே தேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**11.** (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடனும் 10 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவினது எல்லாச் சொத்துக்களும் வருடாந்த அறிக்கை

பொறுப்புக்களும் பற்றிய நிரலொன்றுடனும் சேர்த்து கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப் புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பான கணக்குகள் பற்றிய தனிவேறான கூற்றொன்றும், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செய்யப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் பற்றிய விபரங்களும் அத்துடன் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக் களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத் தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**13.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாக வரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பது

டன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14**. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அல்லது வேறுவகையில் எவ்விதமகவோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை

**15**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான, அத்தகைய பதவிதாங்குநர் ஒருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**16**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே

ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உப்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர், தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*